# இந்திய வரலாறு

## பண்டைய இந்தியா

வரலாற்றுக்கு முற்பட்ட காலம்:

♦வரலாற்றின் தந்தை என்று அழைக்கப்படுபவர் . ஹெரொடோடஸ்.

♦பழைய கற்காலம் கி.மு 10,000 முன்

♦புதிய கற்காலம் கி.மு. 10,000 _ கி.மு.4000

♦செம்பு கற்காலம் கி.மு. 3000 _ கி.மு.1,500

♦இரும்புக் காலம் கி.மு.1,500 __ கி.மு.600

♦பூமியின் தோற்றம் 460 கோடி ஆண்டுகளுக்கு முன்

♦மனிதன்(ஹோமோ செப்பியன்ஸ்) 40,000 ஆண்டுகளுக்கு முன்

♦வேளாண்மை 8000 ஆண்டுகளுக்கு முன்

♦நகரம் 4,700 ஆண்டுகளுக்கு முன்

♦1863_ ஆம் ஆண்டு சென்னைக்கு அருகே பல்லாவரத்தில் இராபர்ட் புரூஸ்ஃபோர்ட் கைக் கோடரி கண்டுபிடித்தார்.

உலோகக்காலம்

♦மனிதன் பயன்படுத்திய முதல் உலோகம் செம்பு ஆகும்.

செம்பு காலம் :

♦இக்காலத்தில் செம்பு மற்றும் வெண்கல உலோகங்கள் பயன்படுத்தப்பட்டன.

♦புதிய கற்காலத்தை தொடர்ந்து வந்த காலம் செம்புக்காலம் ஆகும்.

♦தென்னிந்தியாவில் கோதாவரி, கிருஷ்ணா,துங்கபத்திரா, பெண்ணாறு, காவிரி ஆகிய நதிகளின் பள்ளத்தாக்குகளில் இக் காலத்தில் குடியானவ சமுதாயங்கள் தோன்றி வளர்ந்தன.

♦தமிழ்நாட்டின் பையம்பள்ளியில் வெண்கலம் மற்றும் செம்பு ஆகியவற்றாலான பொருட்கள், சுடுமண் உருவங்கள், மண்பாண்டங்கள் போன்றவை காணப்படுகின்றன.

இரும்புக் காலம்:

♦செம்பு _கற்காலத்தை தொடர்ந்து வந்த காலம் இரும்புக் காலமாகும்.

♦கி.மு.800 முதல் 150 இடையே உள்ள காலம் இரும்பு காலம்.

♦இரும்புகாலத்தில் கலப்பை,கத்தி போன்றவை செய்யப்பட்டது.

ஹரப்பா பண்பாடு:

ஹரப்பா _ சிந்திச் சொல்

இதன் பொருள் புதையுண்ட நகரம்

1921ல் அகழ்வராய்ச்சி

பாகிஸ்தானில்; இராவி நதிக்கரை

மொகஞ்சதாரோ :

மொகஞ்சதாரோ _ சிந்திச்சொல்

இதன்பொருள் : இடுகாட்டு மேடு

1922ல் அகழ்வராய்ச்சி

பாகிஸ்தானில்;சிந்து நதிக்கரை

நகர நாகரிகம்

தாய்க்கடவுள்; பசுபதி

பிந்தைய வேத காலம் :

♦பிந்தைய வேதகாலம் கி.மு.1000 _ 600.

♦இதிகாச காலம் என்றும் கூறுவர்

♦கிழக்கு பகுதி (கங்கைப் பகுதி) குடியேற்றம்

♦மகாபாரதம் __ வேத வியாசர்

♦இராமாயணம் _ வால்மீகி

♦ராஜசூயம் __ அரசரின் உயர்ந்த நிலை

♦அசுவமேதயாகம் _ குதிரை செல்லும் நாடுகள்

♦வாஜ்பேயம் _ தேர்பந்தயம்

♦ஏக்ராட்,சாம்ராட்__ அரச பட்டங்கள்

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

இந்திய வரலாறு

♦பாலி,சுல்க்,பாகா __ வரிகள்

♦தனுர்வேதம் __ போர்க்கலை(அரசகுமாரர்களுக்கு)

♦நிஷ்கா,சுவர்ணா,சதமானா __ தங்க நாணயங்கள்

சமணர்கள் __ ஜீனர்கள்

♦1 வது தீர்த்தங்கரர் ரிஷிப தேவர்

♦24வது தீர்த்தங்கரர் மகாவீரர்

♦மகாவீரர்காலம்: கி.மு.534 __ கி.மு.462 வரை

♦பிறந்த இடம்: குந்தக் கிராமம்

♦ஜீனர் __ வெற்றியாளர்

♦கொல்லாமைக் கொள்கை

♦மும்மணிகள் __ ஐந்து ஒழுக்கங்கள்

♦23வது தீர்த்தங்கரர் __ பார்சவ நாதர்

♦தீர்த்தங்கரர் என்ற சொல்லுக்கு வாழ்க்கை என்னும் பிறவிப் பெருங்கடலை கடப்பதற்கு பாதை அமைத்தவர் என்று பொருள்.

மகாவீரர் (சிறந்த வீரர்)

கி.மு.539 முதல் கி.மு. 467 வரை

பிறந்த ஆண்டு _கி.மு.539

♦இயற்பெயர் __ வர்த்தமானர்

♦பிறந்த இடம் __ பீகார் மாநிலத்தில் உள்ள வைசாலி அருகில் குந்த கிராமம்

♦மகாவீரரின் தந்தை __ சித்தார்த்தர்.

♦மனைவி _ யசோதா

♦30 வது வயதில் துறவு வாழ்க்கையை மேற்கொண்டு உண்மையைத்தேடி 12 ஆண்டுகள் அலைந்தார். பின்னர் கைவல்யா என்று அழைக்கப்பட்ட ஆன்மீக அறிவு பெற்றார்.

♦ஞானம் பெற்ற இடம் __ ரிஜீபாலிகா

♦உயிர்நீத்த இடம் __ பவபுரி

♦இவருக்கு வழங்கிய பிற பெயர்கள்:

1.கைவல்யா

2.மகாவீரர் (சிறந்த வீரர்)

3.ஜீனர்(வென்றவர்)

மகாவீரரின் போதனைகள் மூன்று இரத்தினங்கள் அல்லது மூன்று மணிகள் எனப்படும் . அவைகள்

♦நல்ல நடத்தை

♦நல்ல நம்பிக்கை

♦நல்ல அறிவு

மகாவீரரின் ஐந்து ஒழுக்கக் கொள்கைகள்:

♦அகிம்சை __ எந்த உயிருக்கும் தீங்கு செய்யாமை

♦சத்யம் __ உண்மையே பேசுதல்

♦அஸ்தேயம் __ திருடாமை

♦தியாகம் __ எல்லா செல்வங்களையும் துறத்தல்

♦பிரம்மச்சரியம் __ தூய வாழ்க்கை வாழ்தல்

முதலாவது சமண மாநாடு: கி.பி.3 ஆம் நூற்றாண்டு

♦பாடலிபுத்திரத்தில் நடைபெற்றது.

♦தலைமை: ஸ்தூலபத்திரர்.

இரண்டாவது சமண மாநாடு: கி.பி. 5 ஆம் நூற்றாண்டு

♦வல்லபி நகரில் நடைபெற்றது.

♦இதற்கு தலைமை ஏற்றவர்: கஷ்மஸ்மணா

♦சமணர்களின் கோவில்களை அழித்தது: அலாவுதீன்கில்ஜி.

முக்கிய பிரிவுகள்:

♦திகம்பரர்கள் ஆகாயத்தை உடையாக அணிந்தவர்கள் __ நிர்வாண சமணர்கள்

♦சுவேதம்பரர்கள் வெள்ளை உடை அணிந்தவர்கள்.

புத்த சமயம் (கி.மு.567 முதல் கி.மு. 487 வரை)

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

♦புத்தர் பிறந்த ஆண்டு கி.மு. 567

♦வட்டக் காமினி அபயன் காலத்தில் திரிபிடகம் எழுதப்பட்டது.

♦ஹீனயானத்தை பின்பற்றியவர் அசோகர்

♦மகாயனத்தை பின்பற்றியவர் கனிஷ்கர் மற்றும் ஹர்ஷர்

♦அஜந்தா, எல்லோரா மகாராஷ்டிரா __ ஔரங்கபாத்.

♦புத்த மதத்தை நிறுவியவர் __ புத்தர்.

♦புத்தர் என்னும் சொல்லுக்கு புத்தியை பெற்றவர் அல்லது நல்லது எது கெட்டது எது என்பதை அறிந்து கொண்டவர் என்று பெயர்.

♦இயற்பெயர் __ சித்தார்த்தர்

♦தந்தை_நேபாளம் கபிலவஸ்து நாட்டின் மன்னர் சுத்தோதனர்.

♦தாய் _ மாயாதேவி

♦இனம்_சாக்கியர்; வம்சம் _ சத்ரியர்;

♦வளர்ப்புத்தாய் __ கௌதமி (மாயாவின் தங்கை)

♦கௌதமியால் வளர்க்கப்பட்டதால் கௌதம புத்தர் என்று அழைக்கப்பட்டார்.

♦பிறந்த இடம் __ லும்பினி வனம்

♦மனைவி __ யசோதை;

♦மகன்__ இராகுலன்

♦ஞானஒளி கிடைத்த இடம் __ கயை (பீகார்)

♦இயற்கை எய்திய இடம் __ குசி;

♦வயது:80

♦வேறு பெயர்: சாக்கிய முனி ; ஆசிய ஒளிவிளக்கு

♦துறவு மேற்கொள்ளப்பட்ட போது வயது:29

♦ஞானம் பெற்ற போது வயது: 35

புத்த சமய நான்கு உண்மைகள்:

1.மனித வாழ்க்கை துன்பம் நிறைந்தது.

2.துன்பத்திற்கு காரணம் ஆசை.

3.துன்பத்தினை நீக்க ஆசையை ஒழிக்க வேண்டும்.

4.ஆசையை அழிக்க 8 வகை பாதை.

எண்வழிப்பாதை அல்லது எட்டு நெறிகள் :

1.நல்ல சிந்தனை

2.நல்ல நம்பிக்கை

3.நல்லசொல்

4.நல்லசெயல்

5.நல்ல வாழ்க்கை

6.நல்ல முயற்சி

7.நல்ல அறிவு

8.நல்ல தியானம்

♦புத்த மத நூல்கள் பாலி மொழியில் எழுதப்பட்டவை.

♦மகாவம்சம், தீப வம்சம் ஆகியவை இலங்கையில் உள்ள புத்த நூல்கள்.

புத்த சமய கருத்துக்கள் __ திரிபீடகங்கள் ஆக தொகுக்கப்பட்டுள்ளது.

♦விநய பீடகம் __ ஒழுக்கம்

♦சுத்த பீடகம் __ தூய்மை

♦அபிதம்ம பீடகம் __ அறநெறி கருத்துக்கள்

புத்த மாநாடுகள்:

முதல் புத்த மாநாடு:

♦புத்தர் இறந்த சில வாரங்களில் நடைபெற்றது.

♦487 அல்லது 483 கி.மு.வில் ராசகிருகம் என்ற இடத்தில் சட்டபாணி என்ற குகையில் நடைபெற்றது.

♦புத்தரின் உபதேசங்கள் விநய பீடகம் மற்றும் தம்ம பீடகம் என்ற இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டது.

♦விநய பீடகத்தை தொகுத்தவர்: உபாலி

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

♦தம்ம பீடகத்தை தொகுத்தவர்:ஆனந்தா

♦இம்மாநாட்டை தலைமை ஏற்று நடத்தியவர் மகாகஸ்பா

இரண்டாவது புத்த மாநாடு:

♦சுமார் கி.மு. 387 அல்லது 383 _ல் வைசாலி என்ற இடத்தில் நடைபெற்றது.

♦வைசாலியில் வாழ்ந்த புத்த பிக்குகள் விநய பீடகத்தில் இருந்து மாறுபட்டனர்.

மூன்றாவது புத்த மாநாடு:

♦சுமார் கி.மு. 250 _ல் பாடலிபுத்திரத்தில் அசோகர் காலத்தில் நடைபெற்றது.

♦இம்மாநாட்டை தலைமை ஏற்று நடத்தியவர் மொகாலி புத்த திசா

♦இம் மாநாட்டில் அபிதம்ம பீடகம் என்ற மூன்றாவது பீடகம் உருவாக்கப்பட்டது.

நான்காவது புத்த மாநாடு:

♦கனிஷ்கர் காலத்தில் காஷ்மீரம் (அ) ஜலந்தரில் நடைபெற்றது.

♦வாசுமித்ரா மற்றும் அசுவகோஷ் ஆகியோர் தலைமை ஏற்றார்கள்.

♦மூன்று பீடகங்களுக்கு விளக்க உரையாக விபஷாக்கள் இயற்றப்பட்டது.

♦5_வது மற்றும் 6_வது மாநாடு: ஹர்ஷர் காலத்தில் கன்னோசி மற்றும் அலகாபாத்தில் நடைபெற்றது.

மூன்று கொள்கைகள் :

1.புத்தம்

2.தர்மம்

3.சங்கம்

புத்த மத பிரிவுகள்

1.மகாயானம் __ புதியவர்கள்

2.ஹீனயானம் __ பழைமைவாதிகள்

♦உலகம் எங்கும் பரவியுள்ளது மகாயானம்.

♦மகாயானத்தை வளர்த்தவர் : கனிஷ்கர்

♦ஹீனயானத்தை வளர்த்தவர் : அசோகர் மற்றும் ஹர்ஷர்.

♦புத்தர் இறக்கும் போது மகத மன்னர் அஜாதசத்துரு.

புத்த சரிதம்:

♦கனிஷ்கர் காலத்தில் வாழ்ந்த அஸ்வ கோஷர் என்பவரால் எழுதப்பட்டது.

மௌரியப் பேரரசு :

சான்றுகள்

♦கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்.

♦மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா.

♦விசாகத்தரின் முத்திரா ராட்சகம்.

♦இலங்கையின் புத்த சமண நூல்களாக தீப வம்சம், மகாவம்சம்.

♦அசோகரின் பாறைத் தூண் மற்றும் கல்வெட்டுக்கள்.

♦ருத்ரதாமன் என்பவரது கிர்னார் கல்வெட்டு.

♦ஆரியன், புளுடார்க், பிளினி, ஜஸ்டின் போன்ற கிரேக்க அறிஞர்களின் படைப்புகள்,

♦பிற சான்றுகளான மனுதர்மம், காம சூத்திரம் பஞ்சதந்திரம், கமண்டகம்,தண்டியலங்காரம்.

♦வாயு புராணம், விஷ்ணு பிராணம்,மத்யச புராணம்.

சந்திரகுப்த மௌரியர் (கி.மு.322 __ 298)

♦இவர் மௌரிய வம்சத்தை நிறுவியவர்.

♦இவரது தாய் முரா வம்சத்தை சார்ந்தவர் என்றும்,இவர் மயில் வளர்ப்பவரின் மகன் என்றும் கூறப்படுகிறது.

♦இவரை மௌரிய புத்ரா என்று விசாகத்தர் குறிப்பிடுகின்றார்.

♦கி.மு. 305 ல் அலெக்ஸாண்டரின் படைத்தளபதி செல்யூகஸ் நிகேடரை தோற்கடித்தார்.

♦செல்யூகஸ் தூதுவர் மெகஸ்தனீஸ்.

அசோகர் (கி.மு.273 _ 232)

♦மௌரிய அரசர்களில் சிறந்தவர். முதல் தேசிய பேரரசர்.

♦இவரின் வேறு பெயர்கள்: தேவனாம்பிரியர்,பிரியதர்ஷினி.

♦அசோகர் காலத்து கல்வெட்டு அவரை தேவானாம்பிய பியதசி என்று கூறுகிறது.

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

♦தேவானாம்பிரியர் என்றால் தேவர்களால் நேசிக்கப்படுபவர் என பொருள்படும்.

♦இவருடைய மனைவி தேவி.

♦அசோகரின் பேரரசு வடக்கே காஷ்மீரம் முதல் தெற்கே கோதவரி,கிருஷ்ணா சமவெளிகள் வரை பரவி இருந்தது.

கலிங்கப் போர்:

♦ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் 13 ஆண்டுகள் போரில் காலம் கழித்தார்.

♦261_ஆம் ஆண்டில் தற்போது ஒரிசா எனப்படும் கலிங்கத்தின் மீது போர் தொடுத்தார் போரில் 1,50,000 பேர் கைதிகளாகப் பிடிபட்டனர். பல இலட்சம் பேர் உயிர் துறந்தனர். சுமார் 8 ஆண்டுகள் போர் நடைபெற்றதாக அசோகர் தனது கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளார்.

♦எனவே இனி போரிடுவதில்லை என சபதம் எடுத்துக்கொண்டார்.

♦அசோகர் போரிட்ட கலிங்க மன்னனின் பெயர் சில புத்தகங்களில் மட்டும் சசாங்கன் என உள்ளது.

♦முதன் முதல் மக்கள் நல அரசை உருவாக்கியவர் அசோகர்

சாணக்கியர் :

♦இவரின் வேறு பெயர்: கௌடில்யர், விஷ்ணுகுப்தர்.

♦தன நந்தரிடம் அமைச்சராக பணியாற்றிய போது உணவுச் சாலையில் அவமதிக்கப்பட்டதாகவும், எனவே ஒரு வேடனிடமிருந்து சிறுவன் சந்திர குப்த மௌரியரை விலைக்கு வாங்கி, தட்சசீலத்தில் பயிற்சி அளித்து பின்னர் நந்த வம்சத்தை அழித்தாக கூறுவதுண்டு.

♦இவர் எழுதிய ஆட்சி நூல்: அர்த்த சாஸ்திரம் இந்நூல்மௌரியர்களின் அரசியல்,சமுதாயம், சமயம் மற்றும் பொருளாதரம் குறித்து அறிய உதவுகிறது. இது சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டது.

♦விற்பனை வரியை முதன் முதலில் அறிமுகப்படுத்தினார்.

♦இவரை இத்தாலியின் மேக்கிவல்லி என்ற அரசியல் சிந்தனையாளருடன் ஒப்பிடுகின்றனர். (மேக்கிவல்லி எழுதிய நூல் பிரின்ஸ்).

விசாகதத்தர் :

♦இவர் எழுதியுள்ள நாடகங்கள்:-

1.முத்ரா ராட்சகம்

2.தேவி சந்திரகுப்தம்

எச்.ஜி. வெல்ஸ்

♦இவர் அசோகரை ஒளிரும் ஒரு விண்மீன் என்று குறிப்பிடுகிறார்.

சுங்க வம்சம் கி.மு. 186 _ 76

♦சுங்கர்களைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் காளிதாசரின் மாளவிகாக்னிமித்ரம், பாணரின் ஹர்ஷ சரிதம் ஆகும் .

குஷான வம்சம் :

சீன யூச்சி இனக் குழுவின் உட் பிரிவினர்.

தோற்றுவித்தவர் முதலாம் காட்பீசசு.

♦புகழ் பெற்ற குஷான மன்னர்: கனிஷ்கர்

♦கனிஷ்கபுரம் தலைநகர்கட்டியவர்: கனிஷ்கர்

♦கி.பி. 78 சக சகாப்தம்:கனிஷ்கர்

♦மகாயானத்தை தோற்றுவித்தவர்: கனிஷ்கர்

♦இரண்டாம் அசோகர் : கனிஷ்கர்

♦புத்த சரிதம் : அஷ்வ கோசர்

♦குஷாணர்கள் யூச்சி என்ற சீன மரபினைச் சார்ந்தவர்கள்.

♦குஷான வம்சத்தின் முதல் அரசர் குஜலா கட்பீசசு அல்லது முதலாம் கட்பீஸஸ். இவர் காபூலையும் காஷ்மீரையும் கைப்பற்றினார்.

♦இவர்களின் தலைநகர்: பெஷவார் எனப்படும் புருஷபுரம்.

கனிஷ்கர்: 78 __ 120 வரை

♦குஷான வம்சத்தின் சிறந்த அரசர் முதலாம் கனிஷ்கர்.

♦இவர் கி.பி.78 முதல் கி.பி.120 வரை ஆட்சி செய்தார். அவர் துவக்கிய சக சகாப்தம் கி.பி.78 ல் தொடங்கியது.

♦இவர் காஷ்மீரை கைப்பற்றி தனது வெற்றியின் நினைவாக கனிஷ்கபுரம் என்ற ஓர் நகரை நிறுவினார்.

♦கனிஷ்கர் சீனாவின் ஒரு பகுதியை கைப்பற்றிய இந்திய அரசர் ஆவார்.

♦கனிஷ்கர் பாமிர் முடிச்சைக் கடந்து சீனாவுடன் போரிட்டு வென்ற பகுதிகள்: காஷ்கர்,யார்க்கண்டு கோடான். மாளவத்தை ஆண்ட சாகர்களையும், குஜராத் மன்னரையும் வெற்றி கொண்டார்.

குப்தர்கள் காலம் கி.பி. 270 முதல் 570 வரை

குப்த அரசு : கி.பி. 270

சான்றுகள்:

♦இலக்கியங்கள் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி குறிப்புகள்

♦18புராணங்கள்

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

இந்திய வரலாறு

♦சீனப் பயணி பாகியானின் குறிப்புகள்

♦விசாகதத்தர் எழுதிய முத்ரா ராட்சகம்

♦காளிதாசரின் இலக்கியங்கள்

♦பாணர் எழுதிய ஹர்ஷ சரிதம்

♦சமுத்திர குப்தரின் அலகாபத் கற்றூண்

♦நாணயங்கள்

♦முத்திரைகள் மற்றும் வரலாற்றுச் சின்னங்கள்

♥தோற்றுவித்தவர் : ஸ்ரீ குப்தர்

♥ தலைநகரம் :பாடலிபுத்திரம்

♦குப்த வம்சத்தின் முதல் அரசர் : ஸ்ரீ குப்தர் .

♦இவர் வடக்கு வங்காளம் மற்றும் தெற்கு பீகார் பகுதியை ஆண்டதாக தெரியவருகிறது.

♦பின் இவரதுமகன் கடோத்கஜ குப்தர் ஆட்சி செய்தார்.

♦இவருக்குப்பின் இவரது மகன் முதலாம் சந்திர குப்தர் ஆட்சி செய்தார்.

♦தலைநகரம்: பாடலிபுத்திரம் .

முதலாம் சந்திர குப்தர் கி.பி. 320 __ கி.பி. 330

♥குப்தயுகம் __ காலக் கணக்கீடு அறிமுகம்

♦மகாராஜாதிராஜா என்ற பட்டம் முதன் முதலாக பெற்றவர்.

♦குப்த சகாப்தத்தை கி.பி.320ல் தோற்றுவித்தவர்.

♦மனைவி: வைசாலியைச் சார்ந்த லிச்சாவி இளவரசியான குமார தேவி.

♦நாணயத்தில் உருவம் பொறிக்கப்பட்ட முதல் இந்திய இளவரசி லிச்சாவி குமாரதேவி ஆகும்.

இரண்டாம் சந்திரகுப்தர் (கி.பி.380 _415 )

♥பட்டப் பெயர்கள் : விக்ரமாதித்யன் ; சகாரி

♥பாகியான் வருகை

♥காளிதாசர்

♥உஜ்ஜயினி இரண்டாம் தலைநகரம்

♦இவர் சமுத்திர குப்தரின் மகன்.

♦இவர் விக்கிரமாத்தியன் என்ற பெயருடன் அரியணை ஏறினார்.

♦சீன யாத்திரியர் பாகியான் இவர் காலத்தில் இந்தியாவிற்கு வந்தார்.

♦உஜ்ஜயினியை இரண்டாவது தலைநகராக மாற்றினார்.

♦குதுப்பினாருக்கு அருகில் உள்ள இரும்புத் தூண் இவர் நிறுவியது ஆகும்.

♦காளிதாசர் மற்றும் அமரசிம்மன் என்ற புகழ் பெற்ற அறிஞர்கள் இருந்தனர்.

♦அரேபிய வணிகர் கலைமான், வெனிசு நகரப் பயணி மார்க்கோ போலோ ஆகியோர் இரண்டாம் சந்திர குப்தரை சிறந்த அரசர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

♥காளிதாசர் எழுதிய நாடகங்கள் :

♦மாளவிகாக்கினி மித்தரம் __ சுங்க அரசர் வரலாறு .

♦சாகுந்தலம் __ நாடகம்

♦விக்ரமஊர்வசி __ நாடகம்

♥காளிதாசர் எழுதிய காப்பியங்கள்:

♦ரகுவம்சம் __ ராமர் வரலாறு

♦குமாரசம்பவம் __ முருகன் வரலாறு

♥காளிதாசர் எழுதிய பாடல்கள்:

♦மேக தூதம்

♦ரிது சம்சாரம் __ பருவ கால மாற்றம்

♦இவர் இந்தியாவின் ஷேக்ஸ்பியர் என்று அழைக்கப்பட்டார்.

♦அஜந்தா ஓவியம், தமிழ் நாட்டில் உள்ள சித்தன்ன வாசல் ஓவியம் குப்தர் காலத்தை சேர்ந்தவை.

வர்த்தன குலம்

♦குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கு பின்னர் வட இந்தியாவில் தோன்றிய முக்கியமான சுதந்திர அரசு வர்த்தன அரசு ஆகும்.

வர்த்தன குலத்தை தோற்றுவித்தவர்: பிரபாக வர்த்தனர்.

♦தலைநகரம் : தானேசுவரம்

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

♥பிரபாக வர்த்தனரின் வாரிசுகள் :

♦இராஜ்ஜிய வர்த்தனர்

♦இராஜ்ஜிய ஸ்ரீ

♦ஹர்ச வர்த்தனர்

♥ ஹர்ஷ வர்த்தனர் 606 __ 647

♦தலைநகரம் __ கன்னோசி இரண்டாம் புலிகேசியிடம் தோல்வி

♦யுவான் சுவாங் வருகை ; சி யூக்சி குறிப்புகள்

♦பாணர் : ஹர்ஷ சரிதம்

♦ஹர்ஷர் : நாகானந்தம், ரத்னாவளி, பிரியதர்சியா

♦இவ் வம்சத்தின் தலைசிறந்த மன்னர் ஹர்ஷர்.

♦தலைநகரை தானேசுவரத்தில் இருந்து கன்னோசிக்கு மாற்றினார்.

♦ஹர்ஷர் 647 ல் மரணமடைந்தார்.

♥நலந்தாப் பல்கலைக்கழகம்

♦நிறுவியவர் : குமார குப்தர்

♦காலம் : கி.பி.5 ஆம் நூற்றாண்டு

♦ஹர்ஷர் காலத்தில் காஞ்சி தர்மபாலர் தத்துவ பேராசிரியராக பணி புரிந்தார்.

♦1500 ஆசிரியர்கள்: 10000 மாணவர்கள்.

♦80அடி உயரம் உள்ள புத்தர் சிலை நிறுவப்பட்டது.

♥ஹர்ஷர் எழுதிய நூல்கள்

♦இரத்தினாவளி

♦பிரியதர்சிகா

♦நாகானந்தா

♥ஹர்ஷர் அவையில் இருந்த அறிஞர்கள் :

♦பாணபட்டர், ஜெயசேனர் மற்றும் ஹரி தத்தர்.

♥பாணபட்டர்:

♦இவர் ஹர்ஷ சரிதம், காதம்பரி ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

யுவான் சுவாங்:

♦யுவான் சுவாங் என்ற சீனப் பயணி இவர் காலத்தில் இந்தியாவிற்கு வந்தார்.

♦இவர் இந்தியாவில் இருந்த காலம் 15 ஆண்டுகள் ஆகும்.

♦இவர் தென்னிந்தியாவில் காஞ்சிபுரத்திற்கு பயணம் மேற்கொண்டார். பல்லவர் மற்றும் சாளுக்கியர்களின் அரச சபைகளுக்கு சென்றார். எனவே பயணிகளின் இளவரசன் என்று அழைக்கப்படுகிறார்.

♦யுவான் சுவாங் எழுதிய குறிப்புகள் : சியுகி எனப்படும். இது மேலைநாடுகளின் குறிப்பு என்றும் அழைக்கப்படும். இதன் மூலம் ஹர்ஷரின் ஆட்சி முறையைப் பற்றி அறியமுடிகிறது.

♦கி.பி. 644ல் யுவான் சுவாங்கை கௌரவிக்கும் பொருட்டு கன்னோசியில் புத்த சமய மாநாட்டை நடத்தினார்.

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

## இடைக்கால இந்தியா

♦இடைக்காலம் என்பது கி.பி.8 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.18 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலம் ஆகும். ♦முந்தைய இடைக்காலம் என்பது கி.பி.8 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.13 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலம் ஆகும்.

♦பிந்தைய இடைக்காலம் என்பது கி.பி.13 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.18 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலம் ஆகும்.

இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி :

♦முகமது நபியின் காலம் கி.பி.570__கி.பி.632

♦முதன் முதலில் இஸ்லாம் மதத்தை பரப்பியவர்கள் அரேபியர்கள். இஸ்லாம் மதத்தை அரசியல் இயக்கமாக ஆசியாவில் நிலை நிறுத்தியவர்கள் அரேபியர்கள்.

♦இஸ்லாம் மதத்தை மேற்கு மற்றும் கிழக்கு நாடுகளில் பரவச் செய்தவர்கள் துருக்கியர்கள் ஆவார்.

முகமது கஜினி:

♦கி.பி.998ல் அரியணை ஏறினார்.கி.பி.1000 ஆம் ஆண்டில் இந்தியா மீது படையெடுத்தார்.

கஜினியின் வெற்றிகள்:

♦சாஹி மரபைச் சார்ந்த இந்து அரசர் ஜெயபாலரைத் தோற்கடித்தார். முல்தான் அரசர் பதே தாவூத் மற்றும் நாகர்கோட்டை அரசர் ஆனந்த பாலர் ஆகியோரை வென்றார்.

♦தொடர்ந்து சந்தேலேர்களை தோற்கடித்தார்.

♦இந்தியாவின் மீது 17 முறை படையெடுத்தார். இவர் இந்தியாவின் செல்வத்தை கொள்ளையடிக்க படையெடுத்தார். இந்தியாவில் ஆட்சியை நிறுவ வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு இல்லை.

சோமநாதபுர ஆலயம் கொள்ளையடித்தல்:

♦கி.பி.1025ல் கத்தியவாரில் உள்ள சோமநாதபுர ஆலயத்தை கொள்ளையடித்தார்.

♦கஜினி படையெடுப்பின் போது கத்தியவாரின் மன்னராக இருந்தவர் இராஜா பீமதேவன் ஆவார்.

♦சர் ஹென்றி எலியட் எழுதிய இந்திய வரலாறு நூலில் கஜினியின் படையெடுப்புகள் பற்றி எழுதியுள்ளார்.

அரசவை எழுத்தாளர்கள்:

♦முகமது கஜினியின் அரசவையில் பிர்தௌசி மற்றும் அல்பிருணி இருந்தனர்.

♦பிர்தௌசி எழுதி ஷாநாமா என்ற பாரசீக காவியத்தை எழுதினார். இந்நூல் முகமது கஜினி வாழ்க்கை வரலாற்றை கூறுகின்றது.

முகமது கோரி: கி.பி.1173 முதல் கி.பி.1206

♦கஜினி அரசின் கீழ் ஆப்கானித்தானத்தில் ஹீரட்டுக்கும் கஜினிக்கும் இடையே உள்ள கோர் என்ற பகுதியை ஆண்ட சகாபுதின் முகமது என்ற முகமது கோரி கி.பி.1173ல் கஜினியைக் கைப்பற்றினர்.

♦இவரின் படையெடுப்பிற்கு காரணம் இந்தியாவில் இஸ்லாமிய அரசு அமைத்தல் ஆகும். இதில் இவர் வெற்றி பெற்றார்.

முகமது கோரின் படையெடுப்புகள்:

♦1176ல் இந்தியா மீது படையெடுத்தார்.

♦முதலில் முல்தான், உச் ஆகிய இடங்களை வென்றார்.

பஞ்சாப்பையும் சிந்துவையும் வெற்றிக் கொண்டார்.

♦1178_ல் சோலங்கி மன்னர் இரண்டாம் பீமா என்பரிடம் குஜராத்தை கைப்பற்ற போரிட்டு தோற்றார். இதுவே இவரின் முதல் தோல்வி ஆகும்.

♦கி.பி. 1182ல் சிந்து பள்ளத்தாக்கையும் பின் 1185ல் பஞ்சாப்பை வென்று சியால்கோட் என்ற கோட்டையையும் பிடித்தார்.1186ல் லாகூரை வென்றார்.

♦இவர் படையெடுப்பின் சிறப்பு நன்கு திட்டமிட்டு படையெடுத்தல் ஆகும்.

முதலாம் தரெயின் போர் 1191 :

கி.பி. 1189ல் முகமது கோரி பதிண்டா கோட்டையை வென்று இராசபுத்திர அரசர் பிருதிவிராச சௌகான் நாட்டுக்குள் நுழைந்தார். தானேசுவரத்திற்கு அருகில் உள்ள தரெயின் என்ற இடத்தில் டில்லியை ஆண்ட பிரிதிவிராஜ் சௌகான் என்பவருடன் 1191_ல் முகமது கோரி போரிட்டு தோற்றார். இப்போரில் பிரிதிவிராஜ் சௌகானுக்கு அவருடைய மாமனார் கன்னோசி அரசர் ஜெயசந்திரன் உதவ மறுத்துவிட்டார்.

இரண்டாம் தரெயின் போர் கி.பி.1192:

♦1192– ல் பிரிதிவிராஜ் சௌகானை முகமது கோரி வென்றார். முகமது கோரிக்கு கனோஜ் அரசர் செய்சந்திரன் உதவி செய்தார். பிரிதிவிராஜ் சௌகான் கொல்லப்பட்டார்.

♦இந்திய வரலாற்றில் முதன்முறையாக துருக்கிய முஸ்லீம் அரசுகள் இந்தியப் பகுதியில் நுழைய இரண்டாம் தரைன் போர் வழியமைத்துக் கொடுத்தது.

♦1206 ஆம் ஆண்டு முகமது கோரியை கஜினி நகரில் நடந்த ஒரு தொழுகையின் போது ஷியா பிரிவைச் சேர்ந்த புரட்சியாளர்கள் கொலை செய்தனர்.

டில்லி சுல்தான்கள் வரலாறு :

♦1206 முதல் 1526 வரையிலான காலம் டில்லி சுல்தான்கள் காலம் என்று அழைக்கப்படுகின்றது.

♦டெல்லியைத் தலைநகராக கொண்டு 5 சுல்தானிய மரபுகள் ஆட்சி செய்தன.

♥அடிமை வம்சம் : கி.பி.1206 – 1290

♥கில்ஜி வம்சம் : கி.பி.1290 – 1320

♥துக்ளக் வம்சம் : கி.பி.1320 – 1414

♥சையத் வம்சம் :கி.பி.1414 –1451

மாம்லுக் மரபு அல்லது அடிமை வம்சம் 1206 – 1290. குத்புதீன் ஐபக் 1206 –1210 :

♦தோற்றுவித்தவர் : குத்புதீன் ஐ பெக்

♦சிறப்புகள் : டில்லியின் முதல் சுல்தான்

♦தலைநகர் : லாகூர்

♦பதவி ஏற்ற நாள் :24 ஜீன் 1206

♦1206-ல் கோரி முகமது மரணமான பின் சுதந்திரமான முதல் முஸ்லீம் டில்லி சுல்தான் ஆக இருந்தார்.

♦இவரின் வழித் தோன்றலே அடிமை வம்சம் (அல்லது) இல்பாரி துருக்கி வம்சம்(அல்லது) மாம்லுக் வம்சம் எனப்படுகிறது.

♦லாக் பக்ஷா என்று அழைக்கப்பட்டார்.

♦குதுப்மினாரை 5 அடுக்குகள் வரை கட்டி முடித்தார்.

♦அஜ்மீரில் குவ்வதுல் இஸ்லாம் என்ற மசூதியையும், டெல்லியில் தாய்டின்கா – ஜோன்பாரா என்ற மசூதியைக் கட்டினார்.

♦1210-ல் போலோ (சவ்கன் ) விளையாடும் போது குதிரை மேல் இருந்து வீழ்ந்து இறந்தார்.

ரசியா 1236 – 1240

♦டில்லியின் முதல் மற்றும் ஒரே பெண் பேரரசி

♦இல்தூமிஷின் மகள். இல்துத்மிஷ் மறைவிற்கு பின் ஆட்சியைக் கைப்பற்றிய பிரோஸ் ஷாவை தோற்கடித்து கொன்று பட்டத்து இராணியானார்.

♦ரசியாவை முதல் முதலில் எதிர்த்தவர் சார்கிண்ட் ஆளுநர் அல்தூனியா; பின் திருமணம் செய்து கொண்டார்.

♦ரசியாவின் சகோதரன் முயிசுதீன் பகராம். இவர் பிரபுக்களின் உதவியுடன் ரசியாவை 1240 -ல் தோற்கடித்து பின் கொலை செய்தார்.

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

♦ரசியா காலத்து வரலாற்று ஆசிரியர் : மின்ஹாஜ் -உஸ்-சிராஜ்.

ரசியாவின் வழி வந்தவர்கள்:

♦பக்ரம் ஷா கி.பி.1240-1242

♦அலாவூதின் மசூத் கி.பி.1242-1246

♦நசீருத்தன் மகமுத் கி.பி.1246-1264

♦பால்பன் கி.பி.1265-1287

கியாசுத்தின் பால்பன் 1265 --1286

♦இரும்பு மனிதர்.

♦அடிமை வம்சத்தின் சிறந்த மன்னன்

♦துருக்கி இல்பாரி இனத்தைச் சார்ந்தவர்

♦தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவராக இருந்தார். இக் கோட்பாட்டின் படி அரசர் கடவுளின் பிரதிநிதியாக கருதப்படுவார்.பைபோஸ் என்னும் காலை முத்தமிட்டு வணங்கும் முறையை பின்பற்றினார்.

இந்தியக் கிளி எனப்பட்ட பாரசீக கவிஞர் அமீர் குஸ்ருக்கு ஆதரவு. அமீர் ஹாசன் என்ற அறிஞரையும் ஆதரித்தார்.

கில்ஜி வம்சம் 1290 _1320

♦தோற்றுவித்தவர் :ஜலாதுதீன் கில்ஜி

♦இவரின் மருமகன் :அலாவூதின் கில்ஜி

♦அலாவூதீன் கில்ஜி தேவகிரி மன்னர் இராமச்சந்திர தேவரை தோற்கடித்தார்.

♦இவர் இரத்தம் சிந்தா ஆட்சியை வழங்க விரும்பியதால் கருணை உள்ளம் கொண்ட ஜலாதுத்தீன் என்று அழைக்கப்பட்டார். ஜலாலுதீன் கில்ஜி பின்னர் அலாவுதின் கில்ஜியால்(மருமகன்) கொல்லப்பட்டார்.

♦தக்காணத்தின் மீது ஆதிக்கம் செலுத்திய முதல் முஸ்லீம் மன்னர் என்ற பெயர் உண்டு. அலாவுதீன் கில்ஜி 1296--1316

♦கில்ஜி வம்சத்தின் சிறந்த மன்னர்.

♦தென் இந்தியாவின் கோடிவரை ஆண்ட முதல் முஸ்லீம் மன்னர் என்ற பெயர் உண்டு.

குத்புதின் முபராக்

♦கில்ஜி வம்சத்தின் கடைசி அரசர்.

துக்ளக் வம்சம் 1320-1414

கியாஸ் உதீன் துக்ளக் 1320-1325

♦தோற்றுவித்தவர் : கியாசுதீன் துக்ளக்.

இயற்பெயர் : காசி மாலிக்.

♦தந்தை : துருக்கியர்.

தாய் : பஞ்சாப் ஜாட் வம்சம்.

♦துக்ளாதாபாத் நகரை கட்டினார்.

நசுருதீன் முகமது துக்ளக் 1394--1414

♦துக்ளக் வம்சத்தின் கடைசி மன்னன்.

தைமூர் படையெடுப்பு :

♦1398-- டில்லி தைமூரால் கைப்பற்றப்பட்டது.1398--99ல் தைமூர் டெல்லியில் பெருஞ்செல்வத்தை கொள்ளையடித்தார்.

♦தைமூரின் படையெடுப்பு துக்ளக் மரபின் வீழ்ச்சிக்கு அடிகோலியது.

சையது வம்சம் 1414--1451

♦துக்ளக் அரசின் கடைசி மன்னர் நசுரூதீன் மாமூது 1413-ல் இறந்தபின் தௌத்கான் லோடி அரியாணையில் அமர்ந்தார்.

♦லோடி 1414-ல் முல்தானில் ஆளுநர் கிசர்கானிடம் அடி பணிந்தார்.

♦சையது வம்சத்தை கிசர்கான் தோற்றுவித்தார்.

1421-ல் இவர் இறந்தார்.

அலாவுதீன் ஷா ஆலம் : 1445--1457

♦இவர் சையது வம்சத்தின் கடைசி மன்னர்

♦இவரிடமிருந்து பகலூல் லோடி ஆட்சியை கைப்பற்றினார்.

லோடி வம்சம் 1451--1526

♦டில்லியை ஆண்ட சுல்தான்களில் இறுதியானது லோடி மரபு ஆகும்.

பகலூல் லோடி: 1451--1489

♦இவர் பஞ்சாப்பை ஆட்சி செய்த ஆப்கான் பிரிவு ஆவார்.

♦லோடி வம்சத்தை துவக்கியவர்.

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

♦இவர் அரியணையில் அமர்ந்து ஆட்சி செய்வதற்கு பதிலாக உயர்குடியினருடன் கம்பளத்தில் அமர்ந்து ஆட்சி செய்தார்.

சிக்கந்தர் லோடி : 1489--1517

♦1494-ல் பீகார் கைப்பற்றினார் .

♦1504--ல் ஆக்ரா உருவாக்கினார்.

♦1506-ல் தமது தலைநகரை டில்லியில் இருந்து ஆக்ராவிற்கு மாற்றினார்.

♦ஷெனாய் இசையை விரும்பினார். லஹ்ஜட் --இ-- சிக்கந்தர் ஷாகி என்ற இசைத் தொகுப்பு இவர் காலத்தில் உருவாக்கப்பட்டது.

♦தீவிர இஸ்லாமிய பற்று உடையவர். இந்துக்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தார்.

♦லோடி வம்சத்தின் தலை சிறந்த அரசர்.

இப்ராகிம் லோடி : 1517 --- 1526

♦சிக்கந்தர் லோடியின் மூத்த மகன்.

♦கொடுமையான எண்ணம் உடையவர்.

♦இவரின் கீழ் பணி புரிந்த ஆப்கானிய பிரபு தௌலத்கான் லோடி மகன் தில்வர்கான் லோடியை கொடுமைப்படுத்தினார். எனவே தௌலத்கான் லோடி ஆப்கானிய அரசர் பாபரை இந்தியா மீது படையெடுக்க அழைத்தார். முதலாம் பானிபட் போரில் இப்ராகிம் லோடி தோல்வி அடைந்தார்.

சுல்தான்களின் ஆட்சி நிர்வாகம் :

♦320 ஆண்டுகள் நடைபெற்ற சுல்தான்களின் ஆட்சி மதவாத ஆட்சியாகவும், இராணுவ ஆட்சியாகவும் இருந்தது.

♦இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையில் ஆட்சி நடைபெற்றது.

சுல்தானின் மைய நிர்வாகம் :

♦சுல்தான் வானளாவிய அதிகாரங்களை பெற்று இருந்தார். அவருக்கு உதவிட 6 அமைச்சர்களை கொண்ட குழு ஒன்று இருந்தது.

♥வசீர் -- பிரதம அமைச்சர் மற்றும் நிதியமைச்சர்

♥திவானி ரிஸாலத் --- வெளியுறவு அமைச்சர்

♥சுதர்--உஸ்--சாதர் --இஸ்லாமிய சட்ட அமைச்சர்

♥திவானி இன்ஷா --- அஞ்சல் துறை அமைச்சர்

♥திவானி அர்ஸ் -- பாதுகாப்பு அல்லது படைத்துறை அமைச்சர்

♥காஸி--உல்-- கஸாத் -- நீதித்துறை அமைச்சர்.

♦நாட்டின் முதன்மை வருமானம் நிலவரி ஆகும்.

♦டில்லி சுல்தான்களின் ஆட்சி மொழி பாரசீகம் ஆகும். இசுலாம் சமயம் அரசு சமயம் ஆகும்.

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

தலைக்கோட்டைப் போர் -- 1565

♦இந்திய வரலாற்றில் முக்கிய போர் தலைக்கோட்டை போர் ஆகும் . இப்போரில் பாமினி அரசைச் சார்ந்த அகமது நகர், பீஜப்பூர்,கோல்கொண்டா, பீடார் ஆகிய நான்கு தக்காணச் சுல்தான்கள் ஒன்று சேர்ந்து விஜய நகரப் படைகளை 1565-ல் தலைக்கோட்டை என்னும் இடத்தில் தோற்கடித்தனர்.இராமராயர் கொலை செய்யப்பட்டார்.

♦விஜய நகர பேரரசின் அழிவுச்சின்னங்கள் கிடைக்குமிடம் ஹம்பி.

விஜயநகர காலம் -- தமிழ் நூல்கள்

| நூல்கள் | எழுதியவர் |
|---|---|
| சிவஞான போதம் | மெய்கண்டார் |
| சேதுபுராணம் | அழகிய தேசிகர் |
| கந்தபுராணம் | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| திருமலைபுராணம், | |
| சொக்கநாதர் உலா | திருமலைநாதர் |
| இருசமய விளக்கம் | ஹரிதாசர் |
| அரிச்சந்திர புராணம் | நல்லூர் வீரகவியார் |
| நன்னூல் | பவநந்தி |

பக்தி இயக்கங்கள் :

♦தோன்றிய இடம் -- தென்னிந்தியா

♦இராமானந்தர் --வட இந்தியாவில் சேர்த்தார்

♦கபீர் --- மக்களிடையே பரப்பினார்

♦ஆதி சங்கரர் --- அத்வைதம்

♦பக்தி இயக்கத்தின் காலம்: தென்னிந்தியாவில் பக்தி இயக்கம் கி.பி.7 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.12 ஆம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்தில் தோன்றியது.

சீக்கியர்கள்

குருநானக் (1469--1539)

♦சீக்கிய சமயத்தை உருவாக்கியவர் __ குருநானக்.



கல்வி அமுது http://kalviamuthu.blogspot.com

♦பிறந்த இடம் --- தால்வண்டி --நான் கானா சாஷிப்

♦ஞானஒளி பெற்ற இடம் -- சுல்தான்பூர் -- பாயீன் என்ற ஆற்றில் குளிக்கச் சென்ற போது ஞான ஒளி கிடைத்தது.

♦இறுதியாக வாழ்ந்த இடம் -- கார்த்தார் பூர்

9 வதுகுரு தேஜ்பகதூர் 1664 -- 75

♦இவர் இசுலாமிய மதத்திற்கு மாற மறுத்தமையால் அவுரங்கசீப்பால் கொலை செய்யப்பட்டார்.

10 வது குரு கோவிந்த சிங் 1675 -- 1708

♦சீக்கியர்களின் பத்தாவது குரு மற்றும் கடைசி குரு.

♦கல்சா என்ற அமைப்பினை உருவாக்கினார்.

மொகலாயர்கள்

பாபர் கி.பி. 1526 -- கி.பி.1530

♦இயற்பெயர் -- ஜாகிருதீன் முகமது பாபர்.

.♦பாபர் என்ற சொல்லுக்கு புலி என்று பொருள்.

♦தந்தைவழி -- தைமூர்(துருக்கி).

♦தாய்வழி --செங்கிஸ்கான் (மங்கோலியர்).

♦தந்தை -- உமர் ஷேக் மிர்சா

♦பிறந்த இடம் -- பர்கானா

முதல் பானிப்பட்டு போர்

♦தௌலத்கான் லோடி 1526ல் பாபருக்கு இந்தியா மீது படையெடுக்க வழிகாட்டினார்.

♦பாபரின் படைகளுக்கும், இப்ராஹிம் லோடியின் படைகளுக்கும் 1526 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் பானிப்பட் என்ற இடத்தில் போர் நடைபெற்றது.

♦இப்போரில் பாபர் வெற்றி பெற்றார். பாபர் துல்குமா எனப்படும் போர் முறையை பின்பற்றினார்.பாபர் இப் போரில் ரூமி எனப்படும் பீரங்கி படைகளை முதன் முதலில் பயன்படுத்தினார்.

♦பாபர் டெல்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றினார்.

கனுவாப்போர் -- 1527

சந்தேரிப் போர் -- 1528

கோக்ராப்போர் --1529

♦1529ல் பாபர் மரணம் அடைந்தார்.

♦பாபரின் மகள் குல்பதான்பேகம்.

ஹீமாயூன் கி.பி. 1530 -- கி.பி.1540

பிறப்பு : கி.பி. 1508

பிறப்பிடம் : காபூல்

ஆட்சி ஏற்ற ஆண்டு : 1530

♦ஹீமாயூன் என்றால் அதிஷ்டம் என்று பொருள்.

♦ஆட்சி ஏற்றவுடன் அரியணை மலர் படுக்கை அல்ல என்பதை உணர்ந்தவர்.

♦1530 பதவி ஏற்றார்.

♦1556--இறப்பு

♦இறப்பதற்கு முன்பு அக்பரை தனது வாரிசாகவும், பைராம்கானை அக்பரின் பாதுகாவலாராகவும் நியமித்தார்.

முகமது அதில் ஷா :

♦இஸ்லாம் ஷாவின் மகன் பிரோஷ் என்பவரை கொலை செய்து ஆட்சிக்கு வந்தார் . இவர் பிரோஷ் தாய்மாமன் ஆவர். இவர் உப்பு வணிகம் செய்த ஹெமு என்பவரை முதலமைச்சராக நியமித்தார்.

♦சூர் வம்சத்தின் கடைசி மன்னர் சிக்கந்தர் ஷா ஆவார்.

பொறுப்பாளர்கள் :

திவானி -- இ -- விசாரத் : வரவு மற்றும் செலவு

திவானி --இ -- ஆரிஷ் : இராணுவ பொறுப்பாளர்

திவானி -- இ--இராசாலத் : வெளியுரவு மற்றும் தூதரகம்

திவானி --இ -- இன்ஷா : அரசு ஆணை மற்றும் கடித போக்குவரத்து

அக்பர் கி.பி. 1556 -- கி.பி. 1605

♦தேசிய பேரரசர்

♦ஆட்சிப் பொறுப்பேற்ற போது வயது 14

♦ஆட்சிப் பொறுப்பேற்ற ஆண்டு 1556



TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

♦தந்தை -- ஹீமாயூன்

♦தாய் --- அமீதாபேகம்

♦பிறந்த இடம் --- அமர்கோட்

♦பாதுகாப்பாளர் -- பைராம்கான்

♦ஹீமாயூன் இறந்ததும் பஞ்சாப் மாநிலத்தில் கலனார் என்னுமிடத்தில் பட்டம் சூட்டிக் கொண்டு சுமார் 49 ஆண்டுகாலம் ஆட்சி செய்தார்.

இரண்டாம் பானிப்பட் போர் __ 1556

♦1556ல் டில்லியை ஆட்சி செய்த செர்ஷாவின் மருமகன் அதில்ஷாவின் கீழ் பணியாற்றிய ஹெமுவிற்கும் அக்பருக்கும் நடந்தது. இதுவே பானிப்பட் போர் எனப்படும். இதில் அக்பர் வெற்றி பெற்றார். ஹெமு கொல்லப்பட்டார்.

♦1560--ல் பைராம்கான் விடுவிக்கப்பட்டார்.

♦உலகின் ஒளி : நூர் ஜகான்

♦உலகினை வெல்பவர் :ஜகாங்கிர்

♦உலகின் அரசன் : ஷாஜகான்

♦உலகின் வெற்றியாளர் : ஔரங்கசீப்

ஜஹாங்கீர் (1605--1622)

♦அக்பருக்கு பின் அவரது மகன் சலீம் என்ற ஜஹாங்கீர் பதவி ஏற்றார்.

♦ஜகாங்கீர் என்றால் உலகை வென்றவர் என்று பொருள்படும்.

♦ஜகாங்கீரின் சுயசரிதை துசுக் --கி--ஜகாங்கீரி ஆகும்.

♦இவரின் படைத் தலைவர் மகபத்கான்.

♦ஷபர்ஜ் அரண்மனையில் (அக்ரா கோட்டை) நீதிச் சங்கிலி கட்டினார்.

♦கிழக்கிந்திய கம்பெனியின் பிரதிநிதி வில்லியம் ஹாக்கீன்ஸ், சர் தாமஸ் ரோ ஆகியோர் ஜகாங்கீரின் அரசவைக்கு வந்திருந்தனர்.

♦1615ல் தாமஸ் ரோ சூரத் நகரில் இருந்து வியாபாரம் செய்ய அனுமதியைப் பெற்றார்.

நூர்ஜகான் :

♦மிர்சா கியாசுபெக் என்ற பாரசீக பிரபுவின் மகள் நூர்ஜகான்.

♦சிறந்த அழகியான இவரின் பெயர் மெஹ்ரூன்னிசா. விதவையான இவரை கி.பி.1611ல் ஜகாங்கீர் மணந்தார். இவர் மாளிகை ஒளி(நூர் மகால்) என்றும், உலகின் ஒளி என்று பொருள் படும்படி நூர்ஜகான் என்றும் அழைக்கப்பட்டார். ஜகாங்கிர் அரசராக இருந்தாலும் உண்மையான அதிகாரம் நூர்ஜகானிடம் இருந்தது. கி.பி.1611 முதல் 1626 வரை நூர்ஜகான் காலம் என்று அழைக்கப்படுகிறது.

♦1627ல் இவர் மரணமடைந்தார்.

♦ஸ்ரீ நகரில் ஷாலிமர் மற்றும் நிஷாத் பூந்தோட்டங்களை உருவாக்கினார்.

♦சிக்கந்தராவில் தனது தந்தை அக்பரின் சமாதியை கட்டினார்.

ஷஹாபுதீன் முகமது ஷாஜஹான் 1627 -- 1658

♦ஜகாங்கீர் மறைவிற்கு பின்னர் உலகத்தின் அரசன் என்ற பொருள்படும் ஷாஜகான் என்ற பெயரை ஏற்றுக் கொண்டு 30 ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

இவரது இயற்பெயர் : குர்ரம்

ஷாஜகானின் வெற்றிகள் :

♦இவரின் படைத் தலைவர் மகபத்கான்.

♦போர்த்துக்கீசியர்களை வென்றார். தென்னகத்தை தாக்கிய பின் பாரசீகர்களை வென்றார். கோல்கொண்டா, பீஜப்பூர் ஆகிய பகுதிகளை கைப்பற்றினார். இவர் காலத்தில் மராத்தியர்கள் வலிமை பெற ஆரம்பித்தனர்.

முகலாயர் ஆட்சியின் பொற்காலம்:

♦ஷாஜகானின் காலம் முகலாயர் ஆட்சியின் பொற்காலம் எனப்படுகிறது.

♦கட்டக்கலைஞர்களின் இளவரசர் மற்றும் பொறியாளர்களின் பேரரசர் என்று ஷாஜகான் அழைக்கப்படுகிறார். டெல்லியில் உள்ள செங்கோட்டை கட்டினார். அக்கோட்டைக்குள் ரங்மகால், மோதிமகால், திவானி அம் மற்றும் திவானி காஸ் ஆகிய கட்டடங்கள் எழுப்பப்பட்டன.

♦இந்தியாவின் மிகப்பெரிய பள்ளிவாசல்களில் ஒன்றான ஜீம்மா மசூதி வெள்ளைக் கற்களால் கட்டப்பட்டது.

♦ஷாஜஹானாபாத் என்ற அழகிய தலைநகரினை உருவாக்கினார்.

தாஜ்மகால் :

♦கட்டக்கலையின் அதியசமாக கருதப்படும் தாஜ்மகால் ஷாஜகானால் கட்டப்பட்டது.

♦உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகால் ஆக்ரா நகரில் யமுனை ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. தாஜ்மகால் தனது மனைவி மும்தாஜ் மகாலின் நினைவாக கட்டினார்.

பிறமுக்கிய கட்டிடங்கள்:

♦மோதி மஸ்ஜித் (முத்து மசூதி)(ஷாஜகான்)

♦ஷாஜகானா பாத் (புது தில்லி)

♦செங்கோட்டை (சிவப்பு மணல் கல்லால் கட்டப்பட்டது.

♦ஜீம்மா மஸ்ஜித் (ஷாஜகான்) (வெள்ளை பளிங்கு)

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

♦ஜஹாங்கீரின் கல்லறை (ஷாஜகான்)

♦மயிலாசம் அமைத்தார். கோகினூர் வைரம் வைத்திருந்தார்.

♦மயிலாசனம் மற்றும் கோகினூர் வைரத்தை பாரசீக மன்னர் 'நாதர்ஷா' கொள்ளையடித்துச் சென்றார். தற்பொழுது இங்கிலாந்து மியூசியத்தில் உள்ளது.

♦மயிலாசனத்தில் கடைசியாக அமர்ந்த முகலாய மன்னர் முகமது ஷா.

♦1666-ல் ஷாஜகான் இறந்தார்.

ஆலம்கீர் அவுரங்கசீப் (1658 -- 1707)

♦ஔரங்கசீப் தனது சகோதரர்களான தாரா, சுஜா மூரத் ஆகியோர்களை கொன்று 1658 --ல் அவுரங்கசீப் ஆலம்கீர் என்ற பட்டப் பெயருடன் முகலாயப் பேரரசின் மன்னரானார்.

♦ஆலம்கீர் என்றால் உலகின் வெற்றியாளர் எனப்பொருள்படும்.

♦1679 -ல் ஜசியா என்ற வரியை விதித்தார். மேலும் இந்துக்களிடமிருந்து புனித பயணிவரியும் வசூலித்தார். இந்துக்களுக்கு உயர்பதவி மறுக்கப்பட்டது.

♦சீக்கியர்களின் 9வது குரு தேஜ்பகதூர் கொலை செய்யப்பட்டார். சீக்கியர்களின் பத்தாவது குருவான குரு கோவிந்த சிங் என்பவர் முகலாயர்களை இந்தியாவில் இருந்து விரட்ட கால்சா என்ற சக்தி மிக்க இராணுவ அமைப்பைத் தோற்றுவித்தார்.

மராத்தியர்கள் :

♦முறைசாரா போர் முறை --- கொரில்லா போர் முறை

மராத்தியர்களின் எழுச்சிக்கான காரணங்கள் :

1.மலைகளில் இருந்தமையால் ஏற்பட்ட உடல் வலிமை.

2.இராமதாஸ், துக்காராம்,ஏக்நாத் போன்றவர்கள் ஏற்படுத்திய மனவலிமை.

3.தக்காண பீடபூமியின் மேற்பகுதியில் ஏற்பட்ட உறைவிடம் __ மலைப்பகுதி-- இயற்கை அரண்.

4.வறுமை.

5.பொதுசமயம்

6.பொதுப் பண்பாடு -- மாரத்தியர் அனைவரும் ஒன்றே.

7.மொழி வாரியான ஒற்றுமை.

8.மாராட்டிய பெண்களின் தியாக உணர்வு.

♦இவர்கள் சத்திரபதி என்ற பெயருடன் ஆட்சி செய்தனர். ஷாகி போன்சுலே

சிவாஜி (1627 -- 1680)

♦பிறந்த இடம் --- சிவனேரி கோட்டை

♦பிறந்த ஆண்டு ---- கி.பி.1627

♦தந்தை --- ஷாஜி போன்ஸ்லே.

♦தாய் --- ஜிஜா பாய்

♦ஆசிரியர் --- தாதாஜி கொண்டதேவ்.

♦குரு --- குரு ராம்தாஸ்.

♦தலைநகரம் ---ராஜ்கார் கோட்டை

♦குரு ராம்தாஸ் எழுதிய புத்தகம் தசபோதம்.

♦முதல் மனைவி -- சாயாபாய்,

♦1646- தோர்ணாக கோட்டை கைப்பற்றுதல்.

♦1656-- ஜாவ்லியை கைப்பற்றுதல் (திருப்பு முனை)

♦1656-- ரெய்கார் கோட்டை கைப்பற்றுதல்

♦1657 -- அவுரங்கசீப்பிடம் தோல்வி

♦1657 -- கொலாபா -- கல்யாண் பகுதிகள் கைப்பற்றுதல்.

1659 -- அப்சல்கான் கொலை :

♦பீஜப்பூர் சுல்தான் அலி அதில் ஷா சிவாஜிக்கு பாடம் கற்பிக்க எண்ணி அவரை வஞ்சகமாக கொலை செய்ய அப்சல்கான் என்பவரை அனுப்பினார். சிவாஜி அவரை தழுவும் போது தனது கையில் உள்ள புலி நகத்தால் அவரை கட்டியணைத்து கொன்றார். இதனை தொடர்ந்து பீஜப்பூர் சுல்தான் சிவாஜியை சுதந்திர அரசராக ஏற்றார்.

♦1674-ல் ரெய்கார் கோட்டையில் நடைபெற்ற முடிசூட்டு விழாவில் சத்திரபதி என முடி சூட்டிக் கொண்டார்.

♦1677 - கர்நாடக படையெடுப்பு

♦1678-செஞ்சி,தஞ்சாவூர் வேலூர் கோட்டையை கைப்பற்றுதல்.

♦1680 -- மறைவு

♦இவர் மலைவாழ் எலி எனப்பட்டார்.

அஷ்டப்பிரதான்

குப்தர்கள் : நவரத்தினங்கள்

விஜயநகர பேரரசு : அஷ்டதிக் கஜங்கள்

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

மராட்டியர்கள் : அஷ்டப் பிரதான்

♦சிவாஜியின் ஆட்சிக்கு உதவிடும் எண்மர் குழுவிற்கு அஷ்டப்பிரதான் என்று பெயர். அவர்கள் முறையே :

♦பீஷ்வா --- பிரதம அமைச்சர்

♦மந்திரி -- காலமுறை அமைச்சர்

♦சச்சிவா --- உள்துறை அமைச்சர்

♦சுமந்த் -- வெளியுறவு அமைச்சர்

♦சேனாதிபதி -- இராணுவ அமைச்சர்

♦அமத்தியா --- நிதி அமைச்சர்

♦பண்டிடராவ் --- சமயத் தலைவர்

♦நீயாயதீஷ் --- நீதித்துறை

♦சிவாஜியின் பேரரசு சுயராஜ்யம் எனப்பட்டது.

♦நாடு நான்கு பிராந்த் (மாநிலம்) களாகப் பிரிக்கப்பட்டது.

♦மாநிலங்கள் பர்கானாக்களாக பிரிக்கப்பட்டது.

♦கொரில்லா போர் முறை பின்பற்றப்பட்டது.

♦வரிகள் -- சௌத்,படைவரி(1/4)

♦சர்கேஷ் முகி --- விளைச்சலில் பங்கு (1/10)

♦ஜகத் -- விற்பனை வரி

♦முஷ்தார்பா -- வணிகவரி

♦பாரசீக மொழிக்கு பதிலாக மராத்தி ஆட்சி மொழி.

♦பட்டேல் குற்றவியல் வழக்குகளை விசாரித்தார்.

♦மராட்டியர்கள் கோட்டைகளை தாயாக கருதினர்.

♦கடற்படையின் தலைமையிடம் கொலாபாவில் உள்ளது.

♦சிவாஜி கி.பி.1680ல் ரெய்காரில் உயிர் இழந்தார்.

மூன்றாம் பானிபட் போர் -- 14.01.1761

♦தற்போது அரியானா மாநிலத்தில் உள்ள பானிப்பட் என்ற இடத்தில் இப் போர் மராத்தியர்களுக்கும் ஆப்கான் மன்னர் அகமது ஷா ஆப்தாலிக்கும் இடையே நடைபெற்றது. மராத்தியர்கள் சார்பில் பாலாஜி பாஜி ராவ், சாத சிவ ராவ், மகாராஜ் சுராஜ் மால் மற்றும் இப்ராகிம் கான் ஆகியோரும் ஆப்கானிஸ்தான் சார்பில் அகமது ஷா ஆப்தாலி,நாஜிப் உத் தொளா சிராஜ் உத் தொளா ஆகியோரும் போரிட்டனர். இதில் அகமது ஷா ஆப்தாலி அணி வெற்றிப் பெற்றது.

முக்கிய நூல்கள்

| நூலின் பெயர் | எழுதியவர் |
|---|---|
| பில்ஹணர் | விக்ரமாங்க தேவசரிதம் |
| கல்ஹணர் | இராச தரங்கிணி |
| விசாகதத்தர் | முத்ரா ராட்சகம் |
| பதஞ்சலிமுனிவர் | மகா பாஷ்யம் |
| பாணபட்டர் | ஹர்ஷ சரிதம் |
| மாகா | சிசுபாலபதா |
| கங்கா தேவி | மதுரா விசயம் |
| வல்லாளர் | போஜ பிரபந்தம் |
| மெகஸ்தனிஸ் | இண்டிகா |
| மிருதுங்கன் | தராவளி |
| அசுவகோஷ் | புத்த சரிதம் |
| தண்டின் | தச குமார சரிதம் |
| பாரவி | கிராதர்ஜீனியா |
| குமாரதாசர் | ஜானகி ஹரனா |
| மகேந்திர விக்ரமர் | மத்தன விலாசம் |
| மயூரா | சூர்ய சடாகா |
| வாக்பதி | கவுடவாகு |
| ஜெயசிம்மர் | குமார பால சரிதம் |
| மேதுங்கர் | பிரபந்தச் சிந்தாமணி |

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

கலைகள்

புத்த மதம்

சாஞ்சி ஸ்தூபி

அஜந்தா எல்லோரா

குப்தர்கள் காலம்

விஷ்ணு கோவில் --- தெகுவா

சிவா கோவில் --- நாகதா

பார்வதி கோவில் -- அஜய்கார்

தசாவதார கோவில் ___ தியோகார்

சோளங்கி காலம்

தில்லாரா கோவில் --- அபு மலை

சோழர்கள் காலம்

பிரகதீஸ்வரர் ஆலயம் --- தஞ்சாவூர்

கங்கை கொண்ட சோழபுரம்

நாயக்கர்கள் காலம்

மதுரை -- மீனாட்சி அம்மன் ஆலயம்

விஜய நகரம் :

உறம்பி

விட்டல்சாமி கோவில்

ஹெய்சலா காலம் :

பேலூர் --- சென்ன கேசவர் ஆலயம்

ஹெய்சலஸ்வரர் -- ஹலபேடு

பல்லவர்கள் காலம் :

ரத கல்வெட்டு கோவில்கள் --- மாமல்லபுரம்

காஞ்சி கைலாசநாதர் கோவில்

சாண்டள்யர்கள் :

மகாதேவ கோவில்

கஜீராகோ ஆலயம்

ஷெர்ஷா:

பூர்ண குயிலா

சிக்கந்தர் லோடி :

ஆக்ரா

கியாசுதீன் துக்ளக் :

துக்ளதா பாத்

அக்பர் :

ஆக்ரா கோட்டை

பூலான் தார்வாசா

பதேபூர் சிக்ரி

ஹீமாயூன் சமாதி

லாகூர் கோட்டை

ஷாஜஹான் :

ஜீம்மா மசூதி

மோதி மசூதி

செங்கோட்டை

தாஜ்மகால்

அவுரங்க சீப் :



TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

செங்கோட்டை மசூதி

பனராஸ் மசூதி

மதுரா மசூதி

ஆனந்தவர்ம கங்கர் :

பூரி – செகன்நாதர் ஆலயம்

முதலாம் நரசிம்மர் :

கொனார்க்கில் உள்ள சூரிய ஆலயம்

குப்தர்கள் :

அஜந்தா ஓவியங்கள்,

தில்லியில் உள்ள இரும்பு தூண்

நரசிம்மவர்மன் :

ராமேஸ்வரம் கோவில்

இராசராச சோழன் :

தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம்

இராசேந்திர சோழன் :

கங்கை கொண்ட சோழபுரம்

அதில் ஷா :

சார்மினார், ஹைதராபாத்

இல்துமிஷ்

குதுப்மினார்

அலாவுதீன் கில்ஜி :

கோஷக் – இ – சிரி

பெரேஸ் துக்ளக் :

காளி மசூதி

லால்கும்பா

சிக்கந்தர் லோடி :

மோத் சி மசூதி

அகமது ஷா :

சாந்த் மினார்

அகமதாபாத்

பொற்கோவில் நகரம் அமிர்த சரஸ்

மிகப் பெரிய மிருகக் காட்சி சாலை கல்கத்தா.

## நவீன இந்தியா – முதல் சுதந்திரப் போருக்கு முன்

## ஐரோப்பியர்களின் இந்திய வருகை :

♦1453-ல் துருக்கியர்கள் கான்ஸ்டான்டி நோபின் பகுதியைக் கைப்பற்றினர். எனவே ஐரோப்பியர்கள் தங்கக் கிழக்கு நாடுகள் என்று அழைக்கப்பட்ட சீனா மற்றும் இந்தியா விற்கு புதிய வழியைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

♦எனவே ஸ்பெயின் மற்றும் போர்ச்சுக்கல் நாடுகளின் அரசர்கள் மாலுமிகளை ஊக்குவித்தனர்.

♦முதன் முதலில் பார்த்தலோமியா டயஸ் கி.பி.1489– ஆம் ஆண்டு ஆப்பிரிக்காவில் தென்முனையை அடைந்தார். புயல் காரணமாக மேற்கொண்டு பயணம் தொடர இயலவில்லை. எனவே இம்முனையை புயல்முனை என்று அழைத்தார். ஆனால் அவரது பயணம் பிற மாலுமிகளுக்கு பயணம் செய்ய முடியும் என்று நம்பிக்கை அளித்தமையால் ஆப்ரிக்காவின் தென்கோடி முனையை நன்னம்பிக்கை முனை என்று அழைத்தனர்.

போர்த்துகீசியர் :

♦இந்தியாவிற்குக் கடல் வழி காண்பதில் வெற்றி பெற்ற முதல் ஐரோப்பிய நாடு போர்ச்சுகல்.

♦மாலுமிகளுக்கு ஆதரவு அளித்தமையால் மாலுமி ஹென்றி என்று அழைக்கப்பட்ட ஹென்றிமோர் என்ற போர்ச்சுக்கீசிய அரசரின் உதவி பெற்று வாஸ்கோடகாமா ஆப்ரிக்காவில் உள்ள நன்னம்பிக்கை முனை வழியாக 1498, மே மாதம் 27 – ம் நாள் இந்தியாவில் உள்ள கள்ளிக் கோட்டையை வந்து அடைந்தார்.

♦கள்ளிக்கோட்டை மன்னரான சாமரினிடம் வாணிக உரிமையைப் பெற்றார். 1501-ல் வாஸ்கோடகாமா இரண்டாம் முறை இந்தியா வந்து கண்ணனூர் என்னுமிடத்தில் வணிக தலத்தை நிறுவினார்.

♦கோழிக்கூடு, கொச்சின், கண்ணனூர் ஆகிய இடங்களில் போர்த்துகீசியர் பண்டக சாலைகள் நிறுவினர்.

பிரான்சிஸ் –டி – அல்மைடா (1505 – 1509)

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

♦ முதல் போர்ச்சுகீசிய ஆளுநர்

♦நீல நீர்க் கொள்கை

♦1505-- ல் பிரான்சிஸ் --டி-- அல்மைடா இந்தியாவின் முதல் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இந்து மகா சமுத்திரத்தில் போர்ச்சுகீசியர்கள் ஆதிகத்தை மேம்படுத்த கடற்படையின் வலிமையைப் பெருக்கினார். அவர் பின்பற்றிய கொள்கை 'நீல நீர்க் கொள்கை' என அழைக்கப்பட்டது.

♦1509--ல் எகிப்தியர்களால் கொல்லப்பட்டார்.

அல்போன்சா --டி-- அல்புகர்க் (1509--1515)

♦இவர் இந்தியாவில் போர்த்துகீசிய செல்வாக்கு உயர அடித்தளம் அமைத்தவர் ஆவார்.

♦1510--ல் கோவாவைக் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றி அதனை போர்ச்சுகீசியர்களின் தலைநகராக மாற்றினார். 1511 -ல் மலாக்காவைக் கைப்பற்றினார்.

♦விஜய நகர அரசுடன் தன் உறவை பலப்படுத்திக் கொண்டார்.

♦சதி என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை தடுத்தாமையால் சதி ஒழிப்பில் வில்லியம் பெண்டிங் பிரபுவிற்கு முன்னோடியாக திகழ்ந்தார். இந்துக்களை மிக நல்ல முறையில் நடத்தினார்.

♦1515--ல் பாரசீக வளைகுடாவில் ஆர்முசு துறைமுகத்தை அமைத்தார்.

♦கோவா,டையூ,டாமன்,சால்செட் பகுதிகளை தம் வசம் கொண்டு வந்தார்.

டச்சுக்காரர்

♦டச்சுக்காரர்கள் எளிமை, துணிவு மற்றும் வீரச்செயல்களில் ஆர்வம் உடையவர்கள்.

♦1602-ல் ஒன்றிணைந்த நெதர்லாந்து கிழக்கிந்தியக் கம்பெனியை ஹாலந்து நாட்டில் தொடங்கினர்.

♦முதலில் இந்தோனசியத் தீவுகளில் தங்கள் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர்.

♦1605ல் மசூலிப்பட்டினத்தில் தங்கள் வணிகத் தலத்தை அமைத்தனர்.

♦1610 ஆம் ஆண்டு சென்னைக்கு அருகே உள்ள புலிகாட் (பழவேற்காடு) என்னுமிடத்தில் டச்சுக்காரர்களின் முதல் கோட்டை கட்டப்பட்டது. அதுவே அவர்களின் தலைமையிடமாக மாறியது.

♦நாகப்பட்டினத்தை போர்ச்சுகீசியர்களிடமிருந்து கைப்பற்றினர்.

முக்கிய டச்சு வணிக நிறுவனங்கள்:

♦மசூலிப்பட்டினம், சூரத், ஆக்ரா, சின்சுரா.

♦டச்சுக்கார்களின் முக்கிய நோக்கம் வணிகம் ஆகும். அவர்கள் இந்தியாவில் தங்களது அரசு அமைவதை விரும்பவில்லை.

வீழ்ச்சிக்கான காரணங்கள்:

♦1623--ல் டச்சுக்காரர்கள் ஆங்கிலேயரை அம்பாயினா என்னுமிடத்தில் படுகொலை செய்தார்.இதுவே அம்பாயினா படுகொலை எனப்பட்டது.

டேனியர்கள் :

♦1616-ல் டேனியக் கிழக்கு இந்திய கம்பெனி

♦தென்னிந்தியாவில் தரங்கம்பாடி என்னுமிடத்தில் 1620ல் ஒரு வணிகத் தலத்தையும் பின்னர் கல்கத்தாவிற்கு அருகில் உள்ள சொராம்பூர் என்னுமிடத்தில் ஒரு குடியேற்றத்தையும் அமைத்தனர்.

♦இவர்கள் சமய பரப்பாளர்கள். எனவே 1845ல் தங்கள் வணிகத் தலங்களை ஆங்கிலேயருக்கு விற்று விட்டனர்.

ஆங்கிலேயர்கள் :

♦கி.பி.1588 ஆம் ஆண்டு உலகின் மிகப் பெரிய போர்க்கப்பலான ஸ்பானிய ஆர்மடா என்ற கப்பலை ஆங்கிலேயர்கள் வெற்றி கொண்டனர். கடல் வலிமை பெற்ற நாடாக இங்கிலாந்து விளங்கியது.

♦31/12/1600-ல் துவக்கப்பட்ட 100 வியாபாரிகள் கொண்ட இலண்டன் கிழக்கிந்திய வாணிக நிறுவனத்திற்கு இங்கிலாந்து அரசி முதலாம் எலிசபெத் இந்தியா போன்ற கிழக்கு நாடுகளுடன் வாணிகம் செய்யும் சிறப்புரிமையை வழங்கினார். பின்னர் அவர்கள் கிழக்கிந்திய வணிகக் குழுவை நிறுவினர்.

♦1608-ல் இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் கொடுத்த வியாபாரம் செய்ய அனுமதி கோரிய கடிதத்துடன் வில்லியம் ஹாக்கின்சு இந்தியா புறப்பட்டார்.

♦1609-ல் வில்லியம் ஹாக்கின்சு, ஜஹாங்கீரைச் சந்தித்து சூரத் நகரில் வணிக உரிமையைக் கோரினார். போர்ச்சுகீசியர்கள் செல்வாக்கு காரணமாக அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர் சூரத் நகரில் வணிகத்தலம் அமைக்க 1613ல் உரிமை வழங்கப்பட்டது.

♦1615-ல் சர் தாமசு ரோ என்பவர் முதலாம் ஜஹாங்கீரைச் சந்தித்து வாணிக உரிமைகளைப் பெற்றார். சூரத் ,ஆக்ரா, அகமதாபாத், புரோச் நகரில் பண்டக சாலை ஏற்படுத்தப்பட்டது.

சென்னை தோற்றம்:

♦சர் பிரான்சிஸ் டே என்ற ஆங்கில வணிகர் 22/08/1639ல் சென்னையை சந்திரகிரி அரசன் கீழ் இயங்கிய சென்னப்ப நாயக்கரிடமிருந்து விலைக்கு வாங்கி 23/04/1640ல் புனித ஜார்ஜ் கோட்டையை கட்டிக்கொண்டனர்.

இருட்டறை நிகழ்ச்சி 20/06/1756

♦ஆங்கிலேயர்கள் தங்களுக்கு சொந்தமான கல்கத்தா வில்லியம் கோட்டையை புதுப்பிக்க செய்த முயற்சியை சிராஜ் உத்தெளலா வங்காள நவாப் தடுத்தார்.

♦ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த வரியில்லா வணிகம் என்ற முறைக்கு சிராஜ் உத்தெளலா எதிர்ப்பு தெரிவித்தார்.

♦எனவே சிராஜ் உத்தெளலா காசிம் பஜாரில் இருந்த ஆங்கில வாணிகத் தலத்தினைத் தாக்கினர். பின் வில்லியம் கோட்டையை தாக்கி அங்கு இருந்த 145 பேர்களை ஒரு சிறு அறையில் அடைத்தார். 1756 ஆம் வருடம் ஜீன் மாதம் 20 ஆம் நாள் அவர்களில் 123 பேர் மூச்சுத் திணறி இறந்து விட்டனர் என்றும் 23 பேர் மட்டுமே உயிர் பிழைத்தனர் என்றும் கூறப்படுகிறது. இதுவே இருட்டறை சம்பவம் எனப்படும்.

பிளாசிப் போர் 1757

♦1757 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 23 ஆம் நாள் நாவப்பின் தலைநகரான முர்ஷிதாபாத்திக்கு அருகில் உள்ள பிளாசியை நோக்கி கிளைவ் முன்னேறினார். மீர் ஜபார்

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

ஆங்கிலேயருடன் போரில் ஈடுபடவில்லை. நவாப் சிராஜ் உத்தெளலா போரில் கொல்லப்பட்டார்.

♦கிளைவ், தனக்கு உதவி செய்த சிராஜ் உத்தெளலாவின் தளபதி மீர் ஜாபரை நவாப் ஆக நியமித்தார்.

♦பிளாசியில் நடந்தது போர் அல்ல. சிறு கைகலப்பே ஆகும். இருப்பினும் பிளாசிப் போர் இந்தியாவில் ஆங்கில ஆட்சி கால் ஊன்ற வழி வகுத்தது.

வில்லியம் பெண்டிங் பிரபு 1828 -1835

♦இந்திய கவர்னர் ஜெனரல்களின் தலைசிறந்தவர் ஆவார்.

♦தலைமை ஆளுநர் குழுவில் சட்ட உறுப்பினர் நியமிக்கப்பட்டார். முதல் சட்ட உறுப்பினர் மெக்காலே பிரபு ஆவார்.

♦1835 மார்ச் 17--ம் நாள் முதல் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும் ,பயிற்சி மொழியாகவும் மாறியது.

♦1835--ல் மருத்துவக் கல்லூரி கல்கத்தாவில் திறக்கப்பட்டது.

♦1829-ல் சதிஒழிப்பு சட்டத்தை இயற்றி சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை ஒழித்தார்.

♦சதி ஒழிக்கப்பட்ட முழு அளவில் ஆதரவு தெரிவித்தவர் வங்காள மறுமலர்ச்சி இயக்கத்தின் காரணகர்த்தாவான இராசாராம் மோகன்ராய் ஆவார்.

♦இவர் சீலிமன் தலைமையில் குழு அமைத்துத்தனிச்சட்டங்களை ஒழித்தார்.

சதி ஒழிப்பு : 1829 சட்டம் :

♦கணவனை இழந்த மனைவி தன் கணவன் உடலை எரிப்பதற்காக முட்டப்பட்ட சிதையில் தானும் உயிருடன் எரித்து தன் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்பதே சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் ஆகும். வில்லியம் பெண்டிங்பிரபு அரசு இதனை சட்ட விரோதமான குற்றம் என அறிவித்து 1829ல் சட்டம் இயற்றியது. இச் சட்டம் நிறைவேற இராசாராம் மோகன்ராய் மற்றும் தேவேந்திரநாத தாகூர் ஆகியோர் ஆதரவு தந்தனர்.

♥பள்ளிகளிலும்,கல்லூரிகளிலும் ஆங்கிலம் பயிற்று மொழியாக புகுத்தப்பட்டது. சட்ட ஆலோசர் மெக்காலே பிரபு ஆலோசனையின் பேரில் 1835ல் ஆங்கில மொழியை இந்தியாவின் அலுவலக மொழியாக மாற்றினார்.

டல்ஹெளசி பிரபு -- 1848 --1856

♦இந்திய கவர்னர் ஜெனரல்களில் மிகவும் இளைமையாளர் டல்ஹெளசி ஆவார். இவர் நவீன இந்தியாவின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

♦டல்ஹெளசியின் பணிகளை சர் டபிள்யூ.டபிள்யூ.ஹண்டர் என்பவர் வெற்றி கொள்ளுதல் , ஒருங்கிணைத்தல், முன்னேறுதல் என்று மூன்று வார்த்தைகளில் விளக்குகிறார்.

வாரிசு இழப்புப் கொள்கை மூலம் இணைக்கப்பட்ட நாடுகள்:

♦சதாரா,♦ஜெய்ப்பூர்,♦சம்பல்பூர்,♦உதய்பூர், ♦ஜான்சி மற்றும்♦ நாக்பூர்.

இரும்புப்பாதை போக்குவரத்து:

♦இந்தியாவில் முதன்முதலாக 1853ம் ஆண்டு மும்பையிலிருந்து தானா வரை 20 மைல் (36கி.மீ) தூரத்திற்கு இருப்புப் பாதை அமைக்கப்பட்டது.

♦1854ல் ஹௌராவிலிருந்து ராணிகஞ்ச் என்னுமிடம் வரை இருப்புப்பாதை அமைக்கப்பட்டது. 1856ல் சென்னையிலிருந்து அரக்கோணம் வரை இருப்புப் பாதை அமைக்கப்பட்டது.

♦இந்திய இருப்புப்பாதை திட்டத்தின் தந்தை என்று டல்ஹெளசி அழைக்கப்படுகிறார்.

தபால் தந்தி முறை:

♦நாடு முழுவதும் மலிவு விலை அரைஅணா (3 பைசா) தபால் முறையை அறிமுகப்படுத்தினார். அஞ்சல்வில்லை அறிமுகம் செய்யப்பட்டது.

தந்தி முறை:

♦1854-ல் கல்கத்தா முதல் ஆக்ராவுக்கு தந்தி அனுப்பும் முறை கொண்டு வரப்பட்டது.

♦1853-1856 வரையிலான கால கட்டத்தில் சுமார் 4000 மைல் தூரத்திற்கு தந்தி இணைப்புகள் கொல்கத்தா,பெஷாவர்,மும்பை,சென்னை ஆகிய நகரங்களை இணைக்கும் விதமாக அமைக்கப்பட்டது. இவை 1857 புரட்சியின் போது இராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

♥வட்டார மொழிகள் பத்திரிக்கைகள் சட்டம் 1878

♥இந்திய ஆயுதச் சட்டம் 1878

♥தொழிற்சாலைச் சட்டம் 1881 :

♦ரிப்பனின் அரசு 1881 ஆம் ஆண்டு முதல் தொழிற்சாலைகள் சட்டத்தை இயற்றியது.

♦அச் சட்டம் 12 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களின் வேலை நேரத்தை நிர்ணயித்தது. மேலும் அச்சட்டம் தொழிற்சாலைகளில் அபாயகரமான இயந்திரங்களைச் சுற்றி பாதுகாப்பு வேலியிட வேண்டும் என வலியுறுத்தியது.

♥வட்டார மொழிகள் பத்திரிக்கைச் சட்டம் நீக்கப்படுதல் 1881

♥இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 1881:

♦ரிப்பன் பிரபு மக்கள் தொகை கணக்கெடுப்பு முறையை 1881 ஆம் ஆண்டு இந்தியாவில் அறிமுகப்படுத்தினார்.

## இந்திய விடுதலை இயக்கம் – முதல் நிலை கி.பி.1885–கி.பி.1919 வரை :

ஆலன் ஆக்டோவியன் ஹீயூம் :

♦ஸ்காட்லாண்ட் நாட்டைச் சார்ந்த இவர் ஆங்கில அரசில் உயர் அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றார் .

♦இந்தியர்களுக்கு சுயயாட்சி வழங்கவேண்டும் என்ற எண்ணம் உடையவர்.

♦இவர் கல்கத்தா பட்டதாரிகளுக்கு தொடர்ந்து கடிதம் எழுதி வந்தார்.

♦இந்திய மக்களின் உண்மையான விருப்பம் அறிவதற்காக பொறுப்பான ஒரு நிறுவனம் வேண்டும் என டப்ரின் பிரபு ஹீயூம்மை கேட்டுக்கொண்டார்.

♦எனவே ஹீயூம் இந்திய நேஷனல் காங்கிரஸ் என்ற அமைப்பை துவக்கினார்.

Father of Indian National Congress என்று இவர் அழைக்கப்படுகிறார்.

TNPSC STUDYMATERIAL-LAKSHMANAN

இந்திய தேசிய காங்கிரஸ் துவக்கம் --1885

♦1885- ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-31 ஆம் தேதி வரை மும்பையில் கூட்டப்பட்டது.

♦72 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

♦கூட்டத்தின் தலைமை: W.C.பானர்ஜி

♦தலைவராக W.C.பானர்ஜி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

செயலர் A.O. ஹியூம்

கலந்து கொண்ட முக்கியமானவர்கள்:

தாதாபாய் நௌரோஜி சுரேந்திர நாத் பானர்ஜி மதன் மோகன் மாளவியா எம்.ஜி.ரானடே

கோபால கிருஷ்ண கோகலே

சுப்பிரமணிய அய்யர்

பெரோஷா மேத்தா

வங்கப் பிரிவினை -1905

♦வங்கப் பிரிவினை அறிவிக்கப்பட்ட நாள்: 20-07-1905

♦வங்கப் பிரிவினை எதிர்ப்பு நாள்:7-8-1905

♦வங்கப் பிரிவினை நடைமுறைக்கு வந்த நாள் : 16-10-1905.

♦வங்காளம், பீகார்,மற்றும் ஒரிசாவின் ஒரு பகுதியை உள்ளடக்கிய பெரிய மகாணமாக வங்காளம் இருந்தது. அப்பெரிய மாநிலத்தை நிர்வகிப்பது மிக கடினமாக இருந்தது.

♦எனவே 16-10-1905-ல் நிர்வாக சீரமைப்புக்காக வங்காளத்தை கிழக்கு வங்காளம்,மேற்கு வங்காளம் என இரு வகையாக கர்சன் பிரபு பிரித்தார்.

♦வங்கப்பிரிவினையைப் பிரித்தாளும் கொள்கையின் அறிமுகம் என தீவிர எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. இப் பிரிவினை கைவிடப்பட்டு வங்காளம் மீண்டும் 1911 ஆம் ஆண்டு ஒரே மாநிலமானது.

காங்கிரஸின் மிதவாதிகள் :

1.கோபால கிருஷ்ண கோகலே (மிதவாதிகளின் தலைவர்)

2.சுரேந்திர நாத் பானர்ஜி

3.பெரோஷா மேத்தா

4.தாதாபாய் நௌரோஜி

5.எம்.ஜி.ரானடே

♦மிதவாதிகளின் கோரிக்கை அரசியல் பிச்சை போல் உள்ளது என இளைய தலைமுறையினர் வர்ணித்தனர்.

தீவரவாதிகள்:

♦இந்திய விடுதலை போராட்டக்களத்தில் 1906 ஆம் ஆண்டு முதல் 1910 ஆம் ஆண்டு வரை தீவிரவாதிகளின் காலம் எனப்படும்.

1.பாலகங்காதர திலகர் (பால்)--Bal (தீவிரவாதிகளின் தலைவர்)

2.லாலா லஜிபதி ராய் (லால்)

3.பிபின் சந்திர போஸ் (பால்)

4.அரபிந்தோ கோஷ்

♦தீவிரவாதியாக இருந்து பின் ஆன்மிகவாதியாக மாறியவர் அரபிந்தோ கோஷ்.

1907 சூரத் பிரிவினை :

♦சூரத் மாநாட்டில் காங்கிரஸ் தலைவரை தேர்ந்தெடுப்பதில் மோதல் ஏற்பட்டது. இதன் விளைவாக தீவிரவாதிகள் இம்மாநாட்டில் வெளியேறி காங்கிரசில் இருந்து பிரிந்து சென்றார்கள்.

♦தீவிரவாதிகள், மிதவாதிகள் ஒன்பது ஆண்டுகளுக்கு பிறகு 1916--ல் லக்னோ மாநாட்டில் மீண்டும் ஒன்று சேர்ந்தனர்.

1911-- தலைநகர் கல்கத்தாவில் இருந்து தில்லிக்கு மாற்றம் :

♦1911 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதி இந்தியாவின் தலைநகராக தில்லி அறிவிக்கப்பட்டது.

♦ரௌலட் சட்டம் 1919

♦ஜாலியன் வாலா பாக் படுகொலை 1919

அமிர்தசரசில் உள்ள ஜாலியன் வாலா பாக் என்ற பூங்காவில் 13 ஏப்ரல் 1919ல் நடைபெற்றது.

♦காந்தியடிகளின் காலம்: 1919--1947 வரை

♦ஒத்துழையாமை இயக்கம் --1920 --1922

♦சௌரி சௌரா சம்பவம் 1922

♥சைமன் குழு -- 1927

♦இக்குழு 3--2--1928-ம் ஆண்டு இந்தியாவிற்கு வந்தது.

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

லாகூர் காங்கிரஸ் மாநாடு 1929 :

தலைமை : ஜவஹர்லால் நேரு

நடைபெற்ற இடம் : இராவி நதிக்கரையில் உள்ள லாகூர்

நடைபெற்ற நாள் : 31-- 12-- 1929

சிறப்பு : வந்தே மாதரம் என்ற பாடலுக்கு இடையே இந்திய மூவர்ண கொடி ஏற்றப்பட்டது

முக்கிய தீர்மானங்கள் : பூரண சுதந்திரம் காங்கிரசின் லட்சியம்.

♥முதல் வட்டமேசை மாநாடு 1930 :

♦முதல் வட்டமேசை மாநாடு இர்வின் பிரபு காலத்தில் அறிவிக்கப்பட்டது.

♦இது அக்டோபர் மாதத்தில் அறிவிக்கப்பட்டதால் தீபாவளி அறிவிப்பு எனப்படும்.

♦மாநாடு லண்டன் மாநகரில் 16--11--1930 முதல் 19--01--1931 வரை நடைபெற்றது.

♦காங்கிரஸ் தலைவர்கள் இல்லாத காரணத்தால் இம்மாநாடு தோல்வியில் முடிவடைந்தது.

♦இம்மாநாட்டிற்கு இங்கிலாந்து பிரதமர் ராம்சே மெக் டோனால்டு தலைமை வகித்தார்.

இரண்டாம் வட்டமேசை மாநாடு :

♦1931-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7-ம் தேதி தொடங்கியது.

♦காங்கிரஸ் சார்பில் காந்தியடிகள் கலந்து கொண்டார்.

♦முழுச் சுதந்திரம், வகுப்பு பிரச்சனை போன்ற காந்தியடிகள் கோரிக்கைகள் ஏதும் நிறைவேற்றவில்லை.

♦இம்மாநாடு தோல்வியில் முடிவடைந்தது.

♦காந்தியடிகள் 28 டிசம்பர் 1931-ல் இந்தியா (மும்பை) திரும்பினார்.

மூன்றாம் வட்டமேசை மாநாடு :

♦1932--ம் ஆண்டு நவம்பர் 17--ம் தேதி கூடியது.

♦இம்மாநாட்டில் இந்திய தேசிய காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை.

♦இம் மாநாடு தோல்வியில் முடிவடைந்தது.

♦மூன்று வட்ட மேசை மாநாடுகளில் பங்கு கொண்டவர் பி.ஆர்.அம்பேத்கார்

1935--ம் ஆண்டு இந்திய அரசியல் சட்டம் :

♦இச் சட்டம் 1935 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

♦இச் சட்டம் சைமன் குழுவின் அறிக்கை மற்றும் வட்ட மேசை மாநாடுகளின் முடிவுகள் அடிப்படையில் இயற்றப்பட்டன.

♦1937--ல் இந்தியாவில் இருந்து பர்மா பிரிக்கப்பட்டது.

இரண்டாம் உலகபோர் துவக்கம் 1939 :

♦இரண்டாம் உலகபோர் 1.09.1939 ஆம் ஆண்டு துவங்கி 2.09.1945யில் முடிவுற்றது. காங்கிரஸ் தலைவர்கள் அல்லது சட்டமன்ற உறுப்பினர்களையோ கலந்து ஆலோசிக்காமல் இந்தியர்களை இங்கிலாந்து இப்போரில் பயன்படுத்தியது.

♦இரண்டாம் உலகப் போரில் இந்தியர்களை ஈடுபடுத்திய ஆங்கில அரசு பிரதிநிதி: லின்லித்தோ பிரபு.

ஆகஸ்டு அறிக்கை --- 1940

♦இரண்டாம் உலகப் போரில் இந்தியர்களை லின்லித்தோ பிரபு ஈடுபடுத்தியதை காங்கிரசு ஏற்கவில்லை. எனவே லின்லித்தோ பிரபு காங்கிரசை திருப்பதிபடுத்த சில உறுதிமொழிகளை 8.8.1940 அன்று அளித்தார். இதுவே லின்லித்தோ பிரபு அறிக்கை எனப்பட்டது.

♦இதுவே ஆகஸ்டு நன்கொடை எனப்பட்டது.

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

..

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN

TNPSC-STUDYMATERIAL-LAKSHMANAN